ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | மார்ச் 1997 | கானம் : 8

ஸ்ரீ ஹரி:


# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 2 மார்ச் 1997 கானம் : 8


## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 16 | 4 |
| 3. | ஸ்ரீ பாண்டுரங்க அஷ்டகம் | 5 |
| 4. | திருப்பாணாழ்வார் வைபவம் | 8 |
| 5. | வாழ்க்கை எனக்கு புகட்டிய பாடம் | 13 |
| 6. | ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும் - தொடர்ச்சி | 21 |
| 7. | ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம் | 22 |
| 8. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 19 | 28 |
| 9. | செய்திகள் | 31 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



திருவிடந்தை க்ஷேத்ரம் - தீர்த்தவாரி உத்ஸவத்தில்
ஸ்ரீ குருஜி திருமஞ்சனம், ஆராதனை செய்கிறார்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

*ச்ருங்கார தேவ ஸ்ரீ லோல (ச்ருங்கார)*

*குப்ஜா ரக்ஷக காருண்ய பால*
*சந்தனம் லேபயாமி ஸௌலப்ய தேவ (ச்ருங்கார)*

*கஜேந்த்ர ரக்ஷக கம்பீர ஹ்ருதய*
*புஷ்பம் அர்ப்பயாமி புவன ஸுந்தர*

*த்ரௌபதி ரக்ஷக தீன தயாளோ*
*முரளீதர தாஸேன குதூஹல தேவ (ச்ருங்கார)*

அறிவிப்பு : *'ஸ்ரீ குருஜியின் கீர்த்தனங்கள்'* அடங்கிய காஸெட்டுகள் இரண்டு பாகங்கள் வெளி வந்துள்ளன. இரண்டு பாகங்களின் விலை ரூ.60/-.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**

எஸ். பாலகிருஷ்ணன், ✆ PP. 4896264
36/14, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

## மதுரமான மஹனீயர் 16

ஸ்ரீ குருஜி, ஒரு விஷயத்தை ஸங்கல்பித்து விட்டார்கள் என்றால், அது ஈடேறும் விதமே மிகவும் அலாதியாக இருக்கும் என்றும், தானாகவே அதற்கு ஏற்றார்போல் எல்லாம் அமைந்து விடும் என்றும் ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். அது போல், ஒரு சமயம், ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி உத்ஸவத்தின் பொழுது, ‘சந்துரு-சந்தானம்’ அவர்களின் விகடக்கச்சேரி வைக்க விருப்பங் கொண்டார்.

ஏன் என்றால், ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு நம்முடைய பாரத தேசத்தின் புராதனமான கலைகளை ரக்ஷிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. ஆகவே தான், ஸ்ரீ மஹா பெரியவாள் பல ஸந்தர்ப்பங்களில், ஆகம, ஶில்ப, ஜோதிஷ, கிராமிய ஶதஸ் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளார்கள். ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவமாக இருப்பதால், ஸ்ரீ குருஜிக்கு இந்த விருப்பம். விகடக்கச்சேரி ஏற்பாடு செய்வதற்காக பல இடங்களில் விசாரித்துப் பார்த்துவிட்டு கிடைக்காததால் மற்றொரு ஸந்தர்ப்பத்தில் ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள், ஸ்ரீ குருஜி.

பிறகு, ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவம் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. திடும் என்று இரண்டாம் நாள் விகடக்கச்சேரி செய்யும் அந்த குழுவினரில் ஒருவர், உத்ஸவத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார். ஸ்ரீ குருஜியிடம் அவர், ''மதறாஸிற்கு ஏதோ ஒரு காரியமாக வந்தேன். இங்கு, ஸ்ரீ பெரியவாளின் ஜயந்தி உத்ஸவம் நடப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன்'' என்று கூறினார்.

கேட்க வேண்டுமா! ஸ்ரீ குருஜி, அவர்களை விகடக்கச்சேரி செய்யச் சொல்லி மிகவும் சந்தோஷப்பட்டார்.

(தொடரும்)

– ஜயந்தி ஜானகிராமன்

# ஸ்ரீ பாண்டுரங்க அஷ்டகம்

*(ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் அருளியது)*

*மஹா யோகபீடே தடே பீமரத்யா*
*வரம் புண்டரீகாய தாதும் முனீந்த்ரை: ।*
*ஸமாகத்ய திஷ்டந்தம் ஆனந்தகந்தம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 1

மஹாயோக பீடத்தில், பீமரதி என்ற நதியின் கரையில், புண்டரீகன் என்ற பக்தனுக்கு வரம் கொடுப்பதற்காக மஹரிஷிகளுடன் கூட வந்து வசிப்பவரும், ஆனந்தத்திற்குக் காரணமானவரும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*தடித்வாஸஸம் நீலமேகாவபாஸம்*
*ரமாமந்திரம் ஸுந்தரம் சித்ப்ரகாசம் ।*
*வரம் த்விஷ்டகாயாம் ஸமன்யஸ்த பாதம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 2

மின்னல் போன்ற வஸ்திரம் தரித்தவரும், நீருண்ட மேகம் போன்றவரும், மஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமானவரும், அழகு வாய்ந்தவரும், சித்ப்ரகாச ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*ப்ரமாணம் பவாப்தேரிதம் மாமகானாம்*
*நிதம்ப: கராப்யாம் த்ருதோ யேன தஸ்மாத் ।*
*விதாதுர்வஸத்யை த்ருதோ நாபிகோஸ:*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 3

தன்னை அண்டின பக்தர்களுக்கு, ஸம்ஸார ஸமுத்ரம் இவ்வளவு தான் என்பதைக் காட்டுவதற்காக இடுப்பில் இரண்டு கைகளை வைத்தவரும், ப்ரஹ்மதேவன் வசிப்பதற்காக நாபியில் பத்மத்தை தரித்தவரும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*ஸ்புரத்கௌஸ்து பாலங்க்ருதம் கண்டதேஸே*
*ஸ்ரியா ஜுஷ்டகேயூரகம் ஸ்ரீநிவாஸம் ।*
*ஸிவம் ஸாந்தமீட்யம் வரம் லோகபாலம்*
*பரப்ரஹ்மரூபம் பஜே பாண்டுரங்கம் ॥* 4

கண்டதேசத்தில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துபத்தினால் அலங்கரிக்கப் பட்டவரும், தோள்வளை தரித்தவரும், மஹாலக்ஷ்மிக்கு இருப்பிட மானவரும், கண்டாகர்ணனுக்குச் சிவலிங்கரூபியாய் தரிசனம் அளித்த வரும், சாந்தரும், ஸ்தோத்ரம் பண்ணத் தகுந்தவரும், சிறந்தவரும், லோகங்களைக் காப்பவரும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்களைப் பஜிக்கிறேன்.

*ஶரச்சந்த்ர பிம்பானனம் சாருஹாஸம்*
*லஸத்குண்டலாத்ராந்த கண்டஸ்தலாங்கம் ।*
*ஜபாராக பிம்பாதரம் கஞ்ஜநேத்ரம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 5

சரத்கால சந்திர பிம்பத்தைப் போன்ற முகத்தையுடையவரும், அழகிய புன்சிரிப்புள்ளவரும், ப்ரகாசிக்கின்ற குண்டலத்தினால் ஆக்ரமிக்கப்பட்ட கன்னப் பிரதேசத்தையுடையவரும், செம்பருத்திப்பூ போல சிவந்த உதட்டையுடையவரும், தாமரை போன்ற கண்களை உடையவரும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*கிரீடோஜ் ஜ்வலத் ஸர்வதிக்ப்ராந்தபாகம்*
*ஸுரைரர்ச்சிதம் திவ்யரத்னைரனர்க்யை: ।*
*த்ரிபங்கா க்ருதிம் பர்ஹமால்யாவதம்ஸம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 6

கிரீடத்தினால் ப்ரகாசிக்கின்ற சகல திக்குகளையுடையவரும், விலை மதிக்கத்தகாத திவ்ய ரத்தினங்களினால் தேவர்களால் அர்ச்சிக்கப் பட்டவரும், மூன்று மடிப்பு சதையுடன் கூடியவரும், மயில் தோகையினால் அலங்கரிக்கப்பட்டவரும் பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*விபும் வேணுநாதம் சரந்தம் துரந்தம்*
*ஸ்வயம் லீலயா கோபவேஷம் ததானம் ।*
*கவாம் ப்ருந்தகானந்தனம் சாருஹாஸம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 7

பிரபுவும், வேணு நாதம் செய்கின்றவரும், முடிவில்லாதவரும், தானாக வேடிக்கையாய் கோப வேஷம் தரித்தவரும், பசுக்களின் கூட்டத்திற்கு ஆனந்தத்தை அளிப்பவரும் அழகிய சிரிப்புள்ளவரும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*அஜம் ருக்மிணீ ப்ராண ஸஞ்ஜீவனம் தம்*
*பரம்தாம கைவல்யமேகம் துரீயம் ।*
*ப்ரஸன்னம் ப்ரபன்னார்த்திஹரம் தேவதேவம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥* 8

பிறப்பற்றவரும், ருக்மிணீ ப்ராணநாதரும், பரஞ்ஜோதிஸ்ஸும், மோக்ஷ ரூபியும், முக்யனும், துரீயனும், நமஸ்கரித்தவர்களுடைய மனக்கவலையை நீக்குகிறவரும், தேவர்களுக்குத் தேவனும், பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன்.

*ஸ்தவம் பாண்டுரங்கஸ்ய வை புண்யதம் யே*
*படந்த்யேகசித்தேன பக்த்யா ச நித்யம் ।*
*பவாம்போநிதிம் தேபி தீர்த்வாந்தகாலே*
*ஹரேராலயம் ஶாஸ்வதம் ப்ராப்னுவந்தி ॥* 9

புண்யத்தைக் கொடுக்கும் பாண்டுரங்க ஸ்தோத்திரத்தை எவர்கள் ஏக மனதுடனும், பக்தியுடனும் படிக்கிறார்களோ, அவர்களும் மரண காலத்தில் ஸம்சார சமுத்ரத்தை கடந்து அழிவற்றதான ஹரியின் வீடாகிய ஸ்ரீ வைகுண்டத்தை அடைகின்றனர். ●

---

முன் அட்டைப் படம் : 'ப்ரஸ்தான த்ரய பாஷ்ய பாராயண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ குருஜி.

பின் அட்டைப் படம் : அதே மஹோத்ஸவத்தில், பூர்த்தி நாள் அன்று இரவு, ஸ்ரீ மஹா பெரியவாளின் திருவருவுப் படம், பல்லக்கில் பவனி வரும் காட்சி.

# திருப்பாணாழ்வார் வைபவம்

கங்கையிற் புனிதமாய காவிரி நதி பாயப்பெறுதலால் ஒப்புயர்வற்ற தூய்மை பெற்ற சோழவள நாட்டில் ராஜ நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாய், தருமவர்மா என்னும் செம்பியனுக்குக் குமாரியாய் நீளாதேவி அவதரித்த இடமான உறையூரிலே, துர்மதி வருஷத்தில் கார்த்திகை மாதத்து ரோஹிணி நக்ஷத்ரத்திலே திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய் ஒருவர், ஓர் அந்தணாளனது கழனியிலே நெற்பயிர்க்கதிரில் அவதரித்தார்.

பிறவாது பிறந்த அத்தெய்வக் குழந்தையை அவ்வூரிற் பஞ்சம சாதியிற் பாணர் குலத்துப் பிறந்தானொருவன் பார்த்து நல்வினைப் பயனென்று மகிழ்ந்து எடுத்துக் கொண்டு போய், மலடு தீர்ந்து, மருவிய காதல் மனையாளுந்தானுமாக, பசுவின் பால் முதலிய பரிசுத்த ஆஹாரங்களையே கொடுத்துப் போஷித்து வந்தான்.

அங்ஙனம் வளர்ந்த இவர், திருமாலருளால் தோன்றியவராதலால், இயற்கையிலே உலகப் பற்றற்று எம்பெருமானது திருவடித் தாமரைகட்குத் தம் மனத்தை வண்டாக்கியதுமன்றி, தாம் புகுந்த குலத்துக்கு ஏற்ற யாழ்ப் பாடலிலும் தேர்ச்சி பெற்று, அதனால் பாணர் என்றே பெயர் கூறப்பட்டு, நாரத பகவான் போல ஞான வைராக்கியங்களோடு, ஸங்கீத சாமர்த்தியமும் முதிர்ந்து நின்றார்.

இவ்வாறு இருக்கையில், விஷ்வக்ஸேநர் ரஹஸ்யமாக எழுந்தருளி இவர்க்குத் திருவிலச்சினை ஸாதித்துச் சென்றார். அதனால் மஹாபாகவதோத்தமராகிய இவர் ரங்கநாதனுக்குப் பாடல் திருத்தொண்டு செய்ய உத்தேஸித்துப் புறப்பட்டு, தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தவராதலால் உபயகாவேரி மத்தியிலுள்ள ஸ்ரீரங்க திவ்ய க்ஷேத்ரத்தில் அடியிடுதற்குத் துணியாமல், 'தென் காவேரியின் தென் கரையில் திருமுகத் துறைக்கெதிரிலே யாழுங்கையுமாக நின்று கொண்டு நம் பெருமாளைத் திசை நோக்கித் தொழுது, அப்பெருமான் விஷயமாக அநேக திவ்ய கீதங்களை, கண்டமும் கருவியுமொக்க, கேட்பவர் செவியும் மனமும் குளிர, எம்பெருமான் திருவுள்ளமுகக்க, கிந்நர கந்தர்வாதியர் வியப்புறப் பாடினார்.

முன்பு, திருக்குறுங்குடியில், நாடோறும் பகவத் விஷயமான யாழிசை பாடிக் கைஶிகமென்னும் பண்ணின் பயனால் தன்னைச் சரணமடைந்த ஒரு ப்ரஹ்ம ராக்ஷஸ்ஸையும் தீவினை தீர்த்து, நற்கதி

அடைவித்துத் தானும் பிறவிப் பெருங்கடல் கடந்த 'நம்பாடுவான்' என்னும் ஜாதி சண்டாளன் போலவே, இவ்விழி குலத்தவரும் பக்தியாற் பரவசப்பட்டு நெஞ்சம் நெக்குருகக் கண்கள் ஆனந்தவருவி சொரிய, உடல் மெய்க்கூச்செறிய நாடோறும் வைகறையிலே வந்து இசை பாடி நிற்கையில், ஒரு நாள், திருவரங்கச் செல்வனுக்குத் தீர்த்த கைங்கரியஞ் செய்கிற 'லோகஸாரங்கர்' என்னும் அந்தணர்தலைவர் தீர்த்தங்கொண்டு வருதற்குப் பொற்குடத்தை எடுத்துக் கொண்டு பொன்னித்துறையை அடைகையில், அருகிலுள்ள இந்தப் பாணரைப் பார்த்து அருவருத்து 'எட்டச் செல்' என்று பலமுறை பணிக்கவும், இவர் இவ்வுலகத் தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியைச் செவியுறாமல் வாளா நின்றிட்டார்.

அச்செய்தியைக் கேள்வியுற்று மூர்க்க குணமெனக் கருதி, சாதி அபிமானம் மிக்க பல பிராஹ்மணர்கள் ஓடி வந்து 'போ போ' என்று பல முறை கூறவும் அது செவியிற்படாமையாற் பாணர்குலதிலகர் சிறிதும் பெயராது நிஶ்சலமாய் கானம் பாடிக் கொண்டிருக்க, அது கண்டு, அவர்களிற் சிலர் வியந்து 'இவன் ஞானயோகி அல்லன்; கானயோகி போலும்' என்று நினைத்துப் போக, முரட்டுக் குணமுடைய சிலர் 'எப்படியும் இப்பொழுது இவனை இவ்விடம் விட்டுத் துரத்தாது விடுவதில்லை' என்று வீரவாதஞ் செய்து இவர் மேல் பல கற்களை எடுத்து இடைவிடாது ஒருங்கே எறிய, அவ்வன் கற்கள் இவருடைய மெல்லுடல்மேல் நன்கு பட்டிடவும், இவர், பக்தி வயப்பட்டதனால் சிறிதும் ஸ்பர்ஶவுணர்ச்சியின்றி, சோனை மாரியாக ஏழு மேகங்களையுங் கொண்டு இந்திரன் ஏக காலத்திலே பொழிவித்த கல் மழைக்குச் சற்றும் பின்னிடாத கோவர்த்தனமலை போலச் சிறிதும் சலியாதிருந்தார். அது கண்டு அமரர்கோன் போல அனைவரும் அஞ்சி அகன்றனர்.

அப்பொழுது இவரது உடம்பிலும், உள்ளத்திலும் சிறிதும் வருத்தங் காணப்படவில்லையாயினும், பக்தர்களது அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கின்ற அரங்கநாதனது திருவுள்ளம் மிகக் கலங்க, திருநெற்றியும் இரத்த பெருக்குற்றது.

அதனை நோக்கி அர்ச்சகர் மிகவும் பயப்பட்டுக் கோயிலதிகாரி களுக்கு அறிவிக்க, அவர்களும் இவ்வுற்பாதச் செய்தியை அரசனுக்கு போகவிட, மந்திரிகளோடு பலவிதமாக ஆராய்ந்தும் அரசன் காரணங்காணாது கவன்று ஸ்வாமி திருவடியிலே பாரத்தை வைத்திட்டான்.



அதற்கு முன்னே ஒரு நாள், பிராட்டி பெருமாளை நோக்கி, 'வெகு காலமாக நம்மை அநவரத பக்தி பண்ணி வருகிற நம் பாணன் புறம்பே நிற்கப் பார்த்திருக்கலாமோ?' என்று விண்ணப்பஞ் செய்ததற்கு, எம்பெருமான், விரைவிலே அவரை அருகில் அழைத்துக் கொள்வதாக வாக்களித்திருந்தனன்.

அநந்தரம் அவ்வாறே பிராட்டியின் இஷ்டத்தை நிறைவேற்றவும், பாணரைப் பெருமைப்படுத்தவும், ''பகவத் ப்ராப்திக்கு ஜாதி முக்கியமன்று; பக்தியே அமையும்'' என்ற ஸகல ஶாஸ்த்ர ஸாரப் பொருளை நடத்திக் காட்டவும் திருவுள்ளங்கொண்டு திருவரங்கேசன் லோகஸாரங்க மாமுனிவரது கனவில் தோன்றி, 'நமக்கு நல்லன்பரான பாணப்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப் பண்ணி வாரும்' என்று நியமிக்க, அவர் ப்ரஹ்ம முஹூர்த்தத்திற்கு கண்விழித்தவளவிலே ஸ்வப்நத்தில் ஸ்வாமி நியமித்ததை நினைத்து அதிஶயித்து, அப்படியே செய்து தாம் பேறுபெறக்கருதி, அச்செய்தியை அத்திருப்பதியிலுள்ளார் யாவர்க்குந் தெரிவித்து, அவர்களும் உடன்வரச் சென்று, திருமுகத்துறையிலே தீர்த்தமாடித் தௌத வஸ்திரம் உடுத்துப் பன்னிரண்டு திருமண் காப்புகளணிந்து காலைக் கடன் கழித்துக் கரையேறிப் பாணர் வழக்கமாக நிற்கின்ற விடத்துச்சென்று அவர் திருவடிகளிலே ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, 'தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு வரவேண்டும் என்று நம்பெருமாள் அடியேனுக்குக் கட்டளையிட்டருளினார்' என்று சொல்ல, பாணர் தலைவர் 'நீசனான அடியேன் திருவரங்கப் பெருநகரை மிதித்திடுவனோ?' என்று தம் சாதியிழிவைச் சொல்லி மறுத்திட்டனர்.

அப்பால் முனிவர் 'தேவீர் மிதித்திடவேண்டா; பெருமாள் பெரிய திருவடியின் திருத்தோளில் எழுந்தருளுதல் போலத் தேவரீர் அடியேனது தோளில் ஏறியருளும்' என்று பிரார்த்திக்க, அது கேட்டவளவிலே பாணர் அளவிறந்த அச்சங்கொண்டு அதனால் உடல் நடுநடுங்கிச் சொற்குழறி 'மஹா பரிசுத்த மூர்த்தியான தேவரீர் அடியேன் திறத்து இங்ஙனங் கூறவொண்ணாது; பாகவதர் பாதத்திலே தலையை வணங்குவதற்கு உரிய யானோ இக்கொடுந்தொழில் புரிவேன்? இது செய்து பாகவத அபசாரப் படுதலினும் எரிவாய் நகரத்து அழுந்துவது நலமன்றோ?' என்று நைச்சிய வார்த்தைகள் கூறினார்.

அதன்பின் முனிவரர் பகவந் நியமனத்தை விண்ணப்பஞ் செய்து, அது அதிக்ரமிப்பதற்கு உரியதன்று' என்று பகர்ந்து நிர்ப்பந்திக்க,

பின்னை வீணைப்பாடகர் கடவுள் கட்டளைக்கு யாதும் மாறு கூற மாட்டாமற் கூப்பிய கையராய் அநந்தசயனனுக்கே தம்மை அர்ப்பணஞ் செய்து, பரதந்த்ரராய் நின்றிட்டார்.

பின்னர், முனிவரர் பாணநாதரைத் தோளிலேற்றிக் கொண்டு, முக்தனாய்ப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருள்வித்துக் கொண்டு திருமாமணி மண்டபத்துக்குச் செல்லுமாறு போலச் சென்று ரங்கநாதனது திருமுன்பே இறக்கிவிட்டனர்.

உடனே பாணர், இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத் தூடேற்றி வைத்தேனி வங்கி அருள் கொடுத்திட்டடியவரை ஆட்கொள்வானான அணியரங்கனது திவ்யமங்கள விக்ரஹத்தைப் பாதாதிகேசம் நேத்திரா நந்தமாகச் சேவித்து, அதில் ஆழ்ந்து அதன் அழகை அநுபவித்து, அவ்வநுபவ அதிசயத்தைப் பின்புள்ளார்க்கும் விசதமாக்குதற் பொருட்டு 'அமலனாதி பிரான்' என்ற திவ்ய ப்ரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளி அதன் இறுதியில்,

*"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்*
*உண்டவாய னென்னுள்ளங் கவர்ந்தானை*
*அண்டர்கோ னணியரங்கன் னென்னமுதினைக்*
*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"*

என்று தமது துணிபை வெளியிட்டு உலகத்தோரை வாழ்வித்து மிகவும் உகப்போடு நிற்கையில், பெரிய பெருமாள் அத்திருமேனியோடு அவரை அங்கீகரித்தருளத் திருப்பாணாழ்வார் அனைவருங்காண, அப்பிரானது திருவடிகளிலே அந்தர்ப்பவித்துக் காய்ந்த இரும்பு உண்ட நீராயினார்.

கோபாலன், குழலிசையாற் கோக்களை மகிழ்வித்தது போல அக்கோவிந்தனை யாழிசையால் மகிழ்வித்த இவ்வாழ்வார், இவ்வுலகில் வாழ்ந்திருந்தது ஐம்பது வருஷகால மென்பர். லோகஸாரங்கர் முதலிய பலர் இவ்வாழ்வாரை ஆச்ரயித்து நற்கதி பெற்றனர்.

*"காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக்*
*கண்ணனையே கண்டுரைத்த கடியகாதற்*
*பாண் பெருமாளருள் செய்த பாடல் பத்தும்*
*பழமறையின் பொருளென்று பரவுமின்கள்."*

# வாழ்க்கை எனக்கு புகட்டிய பாடம்

*காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு*
*ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்*

எனக்கு வாழ்க்கை இடையறாமல் புதுப்புது பாடங்களைக் கற்பிக்க முயன்று தான் வருகிறது. எனினும், நான் என்னவோ எதையுமே கற்கவில்லை என்றுதான் உணர்கின்றேன். ஏனென்றால், சுபாவத்திலேயே என் ஈடுபாடுகள் எல்லாம் மேலெழுந்த வாரியானவைதான். நான் கண்ட எத்தனை எத்தனையோ விதமான அனுபவங்களாலும் இந்த மனப்போக்கைச் சரிப்படுத்த முடியவில்லை.

என்னுடைய முதல் இரண்டு அனுபவங்களை - அவை என் மூன்றாம் பிராயத்திலும் நான்காம் பிராயத்திலும் நிகழ்ந்ததாக ஞாபகம் - நினைக்கவே அச்சமாக இருக்கிறது. சபலம், பேராசை, பெருவேட்கை, மோசடி, குமைச்சல், இழப்பு, புலம்பல் முதலியவை குறுக்கிழை நெடுக்கிழை இட்டுப் பின்னிய அனுபவங்களே அவை.

ஓர் இரவு, மரநாயொன்று எப்படியோ வீட்டு அறைக்குள் வந்து விட்டது. உரியில் வெல்லம் போட்டு வைத்திருந்த குறுகிய கழுத்துள்ள ஒரு தோண்டியில் அது தலையை விட்டுக் கொண்டு விட்டது. பிறகு வெளியே இழுத்துக் கொள்ள முடியவில்லை. இரவு முழுவதும், அதே சங்கட நிலையில் அது அறையில் இங்குமங்கும் அலைந்தது. எங்கள் வீட்டாரும் அண்டைப் புறத்தாரும் இந்த ஓசையில் விழித்துக் கொண்டு, ஏதோ திருட்டுப் புரட்டுத்தானாக்கும் என்று எண்ணிவிட்டார்கள். ஆனால், சத்தமோ அதிகாலை வரை விடாமல் நீடித்தது. பிறகு சில சூரர்கள் கோலும் கையுமாகச் சென்று கதவைத் திறந்தார்கள். உள்ளே பேராசை பிடித்த அந்த ஜந்துவைக் கண்டார்கள். அதை ஒரு தூணுடன் கயிற்றினால் கட்டினார்கள். சில 'அனுபவசாலி'கள் அழைத்து வரப்பட்டனர். இருபுறமுமாக அவர்கள் நின்று கயிற்றைப் பிடித்தபடி பலப்பரிக்ஷை நடத்த, முடிவில் பாத்திரம் மரநாயின் தலையிலிருந்து விடுவிக்கப்பட்டது. அந்த மரநாய் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. கடைசியில், அதைக் கொண்டுபோய் வெளியில் எங்கோ சுயேச்சையாக விட்டு விட்டார்கள் என்ற நினைப்பு. பேராசை எத்தகைய பயங்கரம் விளைவிக்கும் என்பதைக் கண்முன் ருசுப்படுத்த இந்த சம்பவமே என் அனுபவம். அந்த பேராசைக்காக எங்கள் அண்டை வீட்டார் யாவரும் ஓரிரவுத் தூக்கத்தை இழக்க நேர்ந்தது.

அடுத்த அனுபவம், தெருவோடு போன ஒருவன், சின்னஞ்சிறு பொன் காப்புகள் அணிந்த நான், தனியாக இருப்பதைக் கண்டு உள்ளே நுழைந்து அதைக் கவர முயன்றான். அக்காப்புகளின் கொக்கிகள் கடகடத்துப் போயிருந்தன. அவற்றை உடனே நெருக்கிக் கொண்டு வருமாறு நானே அவனுக்கு அதிகாரமாக, அழுத்தந்திருத்தமாக உத்தரவு போட்டேன். என் கட்டளையை சிரசால் வகித்த அவன், தானே கிட்டிய அந்தக் காப்புகளுடன் ஓடி விட்டான். என்னுடைய ஆபரணத்தைச் செப்பனிட நானே ஏற்பாடு செய்ததில் துள்ளியபடி, உள்ளேயிருந்த வர்களிடம் விஷயத்தைச் சொல்ல விரைந்தேன். குற்றவாளியைப் பிடிப்பதற்காக அவர்கள் தெருவுக்கு ஓடி வந்தார்கள். ஆனால், பொன்னுசாமி என்ற அவன், சொல்லிக் கொண்ட அந்த புனைப் பெயருக்கேற்ப பொன்காப்புகள் அவன் சொத்தாகவே ஆகிவிட்டன.

மோசம் போய் விடுவோமே என்ற உணர்வு, இக உலக லாபத்துக்காக குறுக்குவழி பாய்வதில் இச்சை கொள்ளும் உணர்வு. அவற்றைக் குறிக்கும் இந்தச் சம்பவங்கள், இளசான கள்ளமறியாப் பருவத்திலேதான் நிகழ்ந்தனவென்றாலும் ஏதோ ஒரு விதத்தில் மீண்டும் மீண்டும் ஒன்றையொட்டி மற்றதாக, இன்றைக்கும் தள்ளாத இத்தசையிலும், ஏறக்குறைய எண்பதாவது வயதிலும், நினைவில் தட்டிய படியே உள்ளன.

தன்னையே மையமாகக் கருதும் இந்தச் சுய நல உணர்வையும், அதோடு மேலெழுந்தவாரியாக விஷயங்களை நோக்கும் என் இயல்பான மனோபாவத்தையும் ஓர் அளவு கோலாகக் கொண்டு வெளியுலகை நிர்ணயிக்க முற்படுகிறேன். இதனால் தான், கெட்டிக்காரச் சாமியார் என்ற கியாதியையும் தப்பாமல் சம்பாதித்து வருகிறேன். இந்த அளவையின் மூலம் ஒரே முடிவுக்குத்தான் - சுயநல நோக்கங்கள் முன்னுக்கு நிற்காத மனிதர்கள் யாருமே இல்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டி இருக்கும். எனினும், உண்மையில் அவ்வாறில்லை.

ஆண்டுகள் உருண்டு செல்லச் செல்ல, வேறு ஒரு கருத்துப் பதிந்து வருகிறது. என் சுபாவப்படி இதுவும் மேலோடுதான் பதிகிறது. அதாவது, நன்னெறிகளிலும் தருமத்திலும் ஆழ வேரூன்றி நிற்கும் சில ஆத்மாக்களும், இப்பூவுலகில் ஜீவிக்கத்தான் செய்கின்றனர். தாங்களாகவே முன்வந்து பிறருக்கென்றே உயிர் வாழ்கின்றனர். இதற்காகத் தங்கள் இகவுலக லாபங்களையும் துறப்பது மட்டுமன்றித் தங்கள் ஆத்ம வளர்ச்சிக்கான சாதனையைக் கூடத் தியாகம் செய்கின்றனர். இப்படி ஓர் உணர்வு எனக்கு உதயமாகிறது.

1907-ம் வருஷம் ஆரம்பம். நான் திண்டிவனத்தில் கிறிஸ்தவ மிஷன் பள்ளியொன்றில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு விஷயம் கேள்விப்பட்டேன், 'முன் ஆண்டு, எங்கள் ஊருக்கு விஜயம் செய்த ஸ்ரீ காமகோடி பீடத்து சங்கராச்சாரிய சுவாமிகள், கலவை என்ற ஊரில் ஸித்தி பெற்றுவிட்டார்' என்று. கலவை கிராமம், ஆற்காட்டிலிருந்து பத்து மைல், காஞ்சிபுரத்திலிருந்து இருபத்தைந்து மைல். என் தாயார் வழியில் இருந்த ஒன்றுவிட்ட சகோதரருக்கு பீடாரோகணம் நடத்தி விட்டதாகவும், பின்னர் தகவல் வந்தது. அவர் ரிக் வேதத்தில் சிறிது அத்யயனம் செய்த பின் ஆசாரியார் முகாமில் சேர்ந்திருக்கிறார்.

என் அன்னையின் விதவையான, ஆதரவற்ற சகோதரியின் ஒரே புதல்வர் அவர். அவளுக்கு ஆறுதல் சொல்ல அந்த முகாமில் யாருமே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், குடும்பத்தில், கலவை செல்வதெனத் தீர்மானித்தார் என் தந்தை. அவர் திண்டிவனம் தாலுகாவில் அப்போது பள்ளி சூபர்வைசர். அவரது மாட்டு வண்டியிலேயே அறுபது மைல்களும் போகவேண்டும். திடீரென்று திருச்சியில் நடைபெற்ற கல்வி மாநாட்டுக்கு அவர் செல்ல நேரிட்டதால் யோசனை கைவிடப்பட்டது.

என் அன்னையோ என்னோடும், மற்றக் குழந்தைகளோடும் கலவைக்கு கிளம்பிவிட்டார்கள். சகோதரியின் ஒரே மகன் ஸன்யாசி ஆகி விட்டானே. அவளைத் தேற்ற வேண்டுமே என்று காஞ்சிபுரம் வரையில் சென்றோம். அங்குள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் தங்கினோம். குமரக் கோட்ட திருக்குளத்தில் ஸ்நானம் செய்யப் போனேன் நான். அங்கே பரமகுரு ஸித்தி அடைந்த தினத்தன்று மகா பூஜை செய்வதற்குச் சாமக்கிரியைகள் வாங்குவதற்காக கலவை மடத்தினர் வண்டியில் வந்திருப்பதைக் கண்டேன். ஏனோ அவர்களில் ஒருவர், மடத்தின் பரம்பரைக் காரியஸ்தர், அவர் என்னை மட்டும் தம்முடன் வருமாறு பணித்து என்னைத் தொடருமாறு என் சுற்றத்தாருக்கும் வேறொரு வண்டி அமர்த்தப்பட்டது.

பிரயாணத்தின்போது அவர் நான் இனி வீடு திரும்பாமலே போகக்கூடும் என்றும், இனி என் வாழ்நாள் முழுவதையும் மடத்திலேயே கழிக்க வேண்டி வரலாமென்றும் சூசனையாகத் தெரிவித்தார். சரி தான், ஒன்று விட்ட தமையன் மடாதிபதி ஆகியிருக்கிறார் அல்லவா? நாம் அவருடனேயே வசிக்க வேண்டுமென விரும்புகிறார் போலும் என்று தான் முதலில் எண்ணினேன். அப்போது எனக்கு வயது பதின்மூன்றே தான். இந்த வயதில் நாம் மடத்தில் அவருக்கு என்ன விதத்தில் உபயோக மாயிருக்க முடியும் என்று ஆச்சரியப்பட்டேன்.

மைல்கள் புரளும் போக்கில் காரியஸ்தர் மெல்ல விஷயத்தை விளக்கினார். எனக்குத் தமையன் முறையான புது ஆசாரியருக்கும், ஜுரம் கண்டு, ஜன்னியாகிவிட்டதாம். என்னை அதி விரைவில் கலவையில் சேர்ப்பிக்க அதனால்தான் துடிக்கிறார்கள். குடும்பத்தாரி டமிருந்து பிரித்ததுகூட இதற்காகவே. திண்டிவனத்துக்கே சென்று என்னை அழைத்து வருமாறு தான் அவருக்கு உத்தரவாகியிருந்ததாம். வழியில் காஞ்சியிலேயே கண்டுவிட்டார்கள். சம்பவங்கள் இவ்வாறு எதிர்பாராத முறையில் திரும்புவதைக் கண்டு பிரமித்து விட்டேன். அதிர்ந்தே போனேன். வண்டியிலேயே மண்டியிட்டு அமர்ந்தபடி 'ராமா ராமா' என்று உருவேற்றலானேன். நான் அறிந்திருந்த ஆன்மீக வழிபாடு அது ஒன்றுதான். எஞ்சிய பிரயாணத்தில் அதையேதான் செய்தேன்.

என் அன்னை சிறிது காலம் கடந்துதான் வந்து சேர்ந்தாள். சகோதரியைத் தேற்றுவதற்காக வந்தவள் அதே காரணத்துக்காகத் தனக்கு ஒருவர் தேறுதல் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதைக் காணவே வந்து சேர்ந்தாள்!

நான் காஷாயம் உடுத்திவிட்டேன். ஆனால், ஏதோ நானாகத் தியாகம் செய்ததாலோ, துறவு பூண்டதாலோ அல்ல. குருவின் கீழ் அதிக காலம் வசிக்கும் பாக்கியம் பெற்றவனுமல்ல நான். ஸந்யாசம் ஏற்ற முதல் நாளிலிருந்தே சாஜ்வல்யமான ஒரு தர்பாரின் சகலவிதமான சுகங்களும், பொறுப்புகளும் என்னைச் சூழ்ந்து கொண்டன.

ஆனால் ஒன்று! என் பரம குருவின் பரம சிஷ்யர்களான தும்மலூறு ராமகிருஷ்ணய்யா, அடையப்பலம் பசுபதி அய்யர் என்ற இருவர், நான் துறவு பெற்ற போது கலவையில் இருந்தார்கள். அவர்களுக்குத் தென் ஆற்காடு மாவட்ட கோர்ட்டில் உத்தியோகம். நான், என் இளமைப் பருவத்தில் என்னைத் தக்கபடி உருவாக்கிக் கொள்ளத் தங்களால் இயன்ற சகலமும் செய்வதென அவர்கள் சங்கல்பம் பூண்டிருந்தது, நாளடைவில் தெரிய வந்தது.

ராமகிருஷ்ணய்யா பற்றில்லா மனப்பாங்கு படைத்தவர்தான். எனினும், ஏராளமான குடும்பச் சுமைக்கு அவர் ஆளாகி விட்டதால் என் விஷயமாக அவர்கள் முற்பட்டிருந்த பாரம் முழுவதையும் பசுபதியின் தோளே தாங்கவேண்டியதாயிற்று.

வேலையிருந்தபோது, தமது ஓய்வு நேரங்களையெல்லாம் ஏகாந்த தியானத்திலும், ஸ்ரீ சங்கரரின் பிரகரணங்களிலும் செலவிட்டவர் பசுபதி. அப்படிப்பட்டவர், நான் பீடம் ஏறியவுடன் வேலையிலிருந்து ஓய்வு

பெற்று, அனவரதமும் என்னுடனேயே இருக்கலானார். என்னுடைய செய்கையையும் பேச்சையும் கண் இமைத்தலையும் கூட அவர் கண்காணித்து வந்தார். மடத்தின் வரவு செலவு நிர்வாகத்தை மேற்பார்ப்பதற்காகத் தமது தியான காலத்தைக் கூடக் குறைத்துக் கொண்டார்.

என்னை, அவ்வப்போது தனிமையில் காண்பார் அவர். அந்த இடைவெளிகளில் என்னிடம் காணப்பட்ட ஒவ்வொரு பலவீன அம்சத்தையும் குறிப்பிட்டுச் சொல்வார். அவற்றைத் தவிப்பதற்காக அவர் கூறும் யோசனைகளின்படி நான் நடக்க வேண்டுமென கேட்டுக் கொள்வார். அவர் என்னிடம் மிகவும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. அப்போதெல்லாம், அவர் தம்மைவிட மேலான ஆசிரமத்திலுள்ள ஒருவரிடம் அபசாரம் செய்வதாகவும் நான் குறையற்ற துறவியாகப் பரிணமித்த பின் அதற்குப் பிராயச்சித்தம் செய்யப்போவதாகவும் கூறுவார்.

தமது மனத்தை அதுவே அலசிக்கொள்ளுமாறு திருப்ப வேண்டுமென்று, ஒவ்வொரு நாளும் தம் நண்பர் ஒவ்வொருவரையும் தூண்டுவார் அவர். இகவாழ்வே இறுதி என்றிருந்து, நாம் என்னென்ன நிரந்தரப் படிப்பினை பெற முடிந்தது என்பதை மனம் விட்டுச் சொல்வார். தமது பலவீனங்களை அப்பட்டமாக எடுத்துக்கூறி, உபநிஷதமும், ஸ்ரீ சங்கரரின் நூல்களும் கூறும் பரிகாரங்களை இவ்விஷயத்தில் பரீட்சை பார்க்கலாமா என்று கேட்பார்.

தெருவில் செல்லும் பரிச்சயமற்றவர்களைக் கூடச் சந்தித்து அவர்களுடைய இடர்களையும் இன்னல்களையும் கேட்டறிவார். அவர்களையும் ஆண்டவனின் மெய்யடியார்களாக, வேதாந்தத்தை அனுசரிப்பவர்களாக, ஸ்ரீ சங்கரரின் உண்மைச் சீடர்களாக உயர்த்தி விடுவார்.

1926 வரை, அதாவது பதினெட்டு ஆண்டுகள், அவர் என்னோடு நெருக்கமாக வாழ்ந்து பாஷ்ய பாடங்களைக் கேட்டார். என் பொருட்டே, கொசுவுக்கும் கால் வீக்கத்துக்கும் 'புகழ்' வாய்ந்த கும்பகோணத்தில் தங்கியிருந்து அந்த நோயையும் காய்ச்சலையும் ஏற்றார். இத்தனையிலும் அவர் என்னை பிரிய வேண்டுமே!

கடலூரில், தம் இல்லத்தில் சில மாதங்களாக அவர் நோய்வாய்ப் பட்டிருந்தபோது தான், நானும் என் யாத்திரையில் அங்கு சென்றேன். என்னை ஊர்வலமாக அழைத்துச் சென்றபோது, அவர் மடத்து

யானையைத் தட்டிக் கொடுத்தார். அன்றிரவே அவர் இறுதி மூச்சுப் பிரிந்தது. பயமோ, பக்ஷபாதமோ இன்றிப் பிறருக்காவே இறுகிய அன்புடன் வாழ்ந்த ஒரு வாழ்வு அது.

1923-ம் ஆண்டு, திருச்சி மாவட்டத்தில் யாத்திரை. கிராமமொன்றில் தங்கியிருக்கிறேன். அங்கே சிறுமி ஒருத்தி பன்னிரண்டு வயசுதான் இருக்கும். தன் தம்பி ஒரு பொய் சொல்லிவிட்டான் என்பதற்காக அவனைக் கண்டிப்பதைக் கேட்கிறேன். அந்தச் சிறுமி, சத்தியத்துக்காகக் கட்சி ஆடியதும், தம்பி கெட்டுப் போகக் கூடாது என்று கரிசனம் கொள்ளும் அளவுக்கு அவன் மீது அன்பு வைத்திருந்ததும், மாமுனிவர்களின் ஆக்ஞைக்கும் மேலாகப்படுகின்றன. இவ்வளவு காலத்துக்குப் பின்னுங்கூட அந்நிகழ்ச்சியை நான் மறப்பதற்கில்லை.

கேரளப் பயணத்தின்போது ஒரு பொதுச் சத்திரத்தில் நான் முகாமிட நேர்ந்தது. அங்கே, ஓர் அறையில் வயதான சில நம்பூதிரிகள் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் தம் பூஜையைத் தொடங்குவதற்காகப் பூஜைப்பெட்டியைத் திறந்தார். எனினும் வம்பில் கலந்தபடியேதான் இருந்தார். சிறிது நேரமானபின் தவறை உணர்ந்து பூஜையில் கவனத்தை செலுத்தினார். செலுத்தியவர், உடனேயே பூஜையைக் கட்டி வைத்துவிட்டார். வம்பில் கலந்து கொண்டதால், பூஜை செய்யத் தேவையான சம நிலையில் மனத்தை வைப்பதற்குத் தாம் உள்ளூரச் செய்த முயற்சி தோற்றுவிட்டதாக அவர் காரணம் சொன்னார். உள்ளம் நிச்சலமாக இல்லாதபோது, பூஜை செய்வதற்காக பகட்டுச் செய்வதை விடப் பூஜை செய்யாதிருப்பதே சிலாக்கியமெனக் கருதுவதாகவும் கூறினார்.

என் நினைவில் அப்படியே பசுமையாக உள்ளது இந்தச் சம்பவம். ஆத்ம சாதகனுடைய நோக்கம் எவ்வளவு அந்தரங்க சுத்தமாக இருக்க வேண்டுமென்பதை இது வலியுறுத்திக் கூறுகிறது.

ஸந்யாசி ஒருவரைச் சந்தித்தேன். வடஆற்காடு மாவட்டத்தின் எல்லையிலுள்ள ஒரு கிராமத்தில். இது நடந்தது 1929-ல் அவருக்கு தமிழும் தெரியாது. தெலுங்கும் தெரியாது. மராத்தி, ஹிந்தி தான் தெரியும். ராமேசுவரத்துக்கு ரயில் மார்க்கமாகப் போனாராம். வழியில் அவரது தண்டம் காணாமல் போய் விட்டது. வேறு தண்டம் பெறும்வரை அவர் உபவாசமிருந்ததாகவே தோன்றியது. எனவே, ஸம்ஸ்காரம் செய்து முறைப்படி தண்டம் ஒன்றை அவருக்கு அளித்தேன். அப்போது எண்பது வயதைக் கடந்திருக்கிறார் அவர். என்றாலும், என்னையே அன்றிலிருந்து

தம் குருவாகக் கருதலானார். நான் அவரது ஆசிரம தருமத்தைக் காப்பாற்றினேனாம். அதனால் அப்படியாம். 1945-ல் ஸித்தி அடையும் வரையில் என்னை விட்டு நொடியும் நீங்க மறுத்தவர் அவர்.

அவர் எங்களோடு சேர்ந்த புதிது. 1929-ம் வருஷ சாதுர்மாஸ்யம். நான் மலேரியாக் காய்ச்சலில் படுத்த படுக்கையாகி விட்டேன். நாற்பது நாட்கள். அது வரையில் என்னை எவருமே தொட்டு வழக்கமில்லை. அப்போதோ என்னால் உதவியின்றி நடக்கவும் நிற்கவும் கூட முடியவில்லை. புதிதாக வந்த இந்த முதியவர்தான் இந்த உதவியை எனக்கு அளிக்க முன் வந்தார். தாமும் ஸந்நியாசி என்பதால் அதை ஓர் உரிமையாகப் பெற்று கடமையாகச் செய்தார்.

அவருக்கு முன் கோபம் அதிகம். குரலோ ரொம்ப அதிகாரமாகத் தான் இருக்கும். அக்கம் பக்கத்துக்காரரெல்லாம் அவரிடம் ஒரு நடுக்கம். மத்திய பாரதத்தில் தேவாஸ் சமஸ்தானத்தில் ரெவின்யூ இலாகாவில் பணியாற்றியவராம் அவர். ஆனால் அதிகாரத்திலென்னவோ அந்த நானாசாகேபும், ஜான்ஸிராணியும்கூட இவரோடு போட்டி போட முடியாது.

ஒரு நாள் தவறாமல் அவர் என் பாதங்களைப் பூஜிப்பார். இதிலிருந்து அவரை யாராலும் தடுக்கவும் முடியவில்லை. பூஜை செய்யும் போது அவர் முகத்தில் கண்ணீர் உருண்டோடும்.

காஞ்சியில் இருந்த சமயம். அவரது உறவினர் ஒருவர் ராமேசுவர யாத்திரை மார்க்கத்தில் அங்கு வந்தார். கிழவருடன் பேசிவிட்டு என்னிடம் திரும்பியவர் என்னை நன்றாகக் கடிந்து கொண்டார். 'நூறு வயதை எட்டிப் பிடிக்கும் ஒருவர் என்னையே கடவுளுக்கும் மேலாகக் கருதி சரண் புகுந்திருக்கிறார். நானோ, அந்த பான்மையைச் சிறிதும் பிரதிபலிக்காமல், உணர்ச்சியின்றியிருக்கின்றேன். இது தமக்குப் புரியவே இல்லை' என்றார். இந்த ஏச்சும் என்னிடம் எவ்வித எதிர்விளைவையும் ஏற்படுத்தவில்லை - மேலெழுந்தவாரி நோக்குத்தான் என் இயற்கைக் குணமாயிற்றே!

ஒரு சமயம், நாங்கள் திருப்பதி சென்றிருந்தோம். அந்தத் தொண்டு கிழ சுவாமிகளும் முகாமில் இருந்தார். பெருமாளைத் தரிசிப்பதற்காக நான் மலை ஏறிச் சென்றேன். தரிசனம் ஆயிற்று. கோயிலிலிருந்து நான் வெளி வந்த அதே சமயத்தில் கிழவனார் எங்கள் முன் வந்து நிற்கிறார். எப்படியோ சமாளித்துக்கொண்டு, அந்த விருத்தாப்பியத்திலும்

மலையைக் கடந்து விட்டிருக்கிறார்! அவரது வயது, ஆசிரமம், மடத்துடன் தொடர்பு இவற்றுக்கு மரியாதை செலுத்தி அவருக்கும் பெருமாளைத் தரிசனம் செய்து வைக்க முன் வந்தனர் ஆலய அதிகாரிகள். அவரோ, அப்படியே என் காலடியில் வீழ்ந்தார். ''இவர்தான் அந்தப் பெருமாள். உங்கள் உபசரிப்பை நான் ஏற்பதற்கில்லை, மன்னிக்கவும்'' என்று கூறினார். கடைசியில், பெருமாளைத் தரிசிக்காமலேயே திரும்பினார்.

இந்த முதியவருக்கும், பல விதங்களில் மாறுபட்ட வேறு இருவரிடமும் நான் தொடர்பு கொண்டேன். இவர்களில் ஒருவருக்கு மற்றவரைத் தெரியாது. வயதிலும் அவர்கள் ஒரே மாதிரி எண்ணினர், செயல்பட்டனர்.

என் பாதத்தை வழிபடுவதில் இருவருக்குமே நிரம்பிய பரவசம். என் நினைவிலேயே இரவும் பகலும் ஊறியிருந்தார்களாம். எந்த உத்பாதத்தையும், மனச்சபலத்தையும் இலேசாக்குமளவுக்கு அது, அவர்களுக்கு பெரும்பலத்தை தந்திருந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள்.

பின்னர்தான் அவர்களுக்கு என் குறைபாடுகளும், சுபாவமாக எதிலுமே ஊன்றியில்லாதவன் நான் என்பதும் தெரியவந்தன. அவ்வளவுதான்! அவர்கள் பாத பூஜையை நிறுத்திவிட்டார்கள். அதோடு மட்டுமன்றி வேறு யாராவது பக்தர்கள் என்பாதத்தை பூஜிப்பதே என் குறைபாட்டுக்குக் காரணம் என்பது அவர்கள் நம்பிக்கை.

இவர்களும் தங்கள் வாழ்வின் இதர பொறுப்புக்கள் சகலத்தையும் துறந்தனர். என்னைத் திருத்திக் கொள்ளுமாறு என்னிடமே கேட்டுக் கொள்வதிலும், வேண்டிக் கொள்வதிலும், நான் திருந்த வேண்டு மென்பதற்காகவே ஜபமும் பிரார்த்தனையும் செய்வதிலும் தங்கள் எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் செலவிடச் சங்கல்பித்துக் கொண்டார்கள் அவ்விருவரும்.

''பிறருக்காக மட்டுமே வாழ்வதற்கென்று பகவான் சில ஆத்மாக்களைப் படைத்திருக்கிறான்'' வாழ்க்கை, எனக்கு இதைத்தான் கற்பித்திருக்கிறது.

Courtesy : அமரபாரதி

# ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும்

- தொடர்ச்சி

*கேள்வி : மஹாத்மாக்களின் படங்களை தியானம் செய்யும் அறைகளில் வைத்துக்கொள்வது அவசியமா?*

ஸ்ரீ குருஜி : மஹாத்மாக்களின் படங்களை, அதுவும் தங்களுடைய குருவின் படங்களை தியானம் செய்யும் அறைகளில் வைத்துக் கொள்வது மிகவும் நல்லது. அந்த படங்களிலிருந்தே ஒரு சாந்நித்யம் பரவி, நம்மை மேலும் தியானத்தில் ஊக்குவிக்கும். அதே சமயத்தில், நாம் வைத்துக் கொண்டு பூஜை செய்த மஹாத்மாக்களின் படங்களை, அது சிதிலமடைந்த பிறகும் கூட அதை தூக்கி எரிவதோ, எரிப்பதோ, அலக்ஷியப்படுத்துவதோ கூடாது. வேண்டுமானால் ஸமுத்திரத்தில் கொண்டு போட்டுவிடலாம்.

*கேள்வி : தியானம் செய்யும் அறைகளில் ஊதுவத்தி போன்றவை ஏற்றி வைத்தல் அவசியமா?*

பதில் : தியானம் செய்யும் காலங்களில் ஏற்றி வைத்தால் அவைகளின் ஸுகந்தங்களினால் நம்முடைய தியானம் தடைபடும். தியானம் செய்யாத காலங்களில் ஏற்றி வைப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

*கேள்வி : பெண்கள் தாங்கள் வீட்டிற்கு விலக்காக இருக்கும் காலங்களில் ராம நாம ஜபம் செய்யலாமா?*

பதில் : அக்காலங்களில் நாம ஜபம் செய்து வருவதில் தவறில்லை. அதே சமயத்தில் நாம் இப்படி செய்வது பாவமோ, தவறோ என்ற மன உறுத்தல் இருக்குமானால் ஜபம் செய்ய வேண்டாம்.

*கேள்வி : நாம ஜபம் செய்து கொண்டே வந்தால் எப்பொழுது ஸித்தியாகும்?*

பதில் : எந்த ஒரு காரியமும் கைகூடுவதற்கு தெய்வத்தின் அருள், முயற்சி, காலம் மூன்றும் தான் காரணம். நாம் விடாமல் முயற்சி செய்து கொண்டு வந்தால், சரியான காலம் வரும் பொழுது கைகூடும். ஆனாலும், சரியான நிலத்தில் நல்ல விதை எப்படி முளைத்தே தீருமோ, அது போல், குரு உபதேஸித்த உபதேசம் ஒரு நாள், தன்னுடைய வேலையை செய்தே தீரும்.

# ஸ்ரீமத் பாகவத மஹாத்மியம்

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் துவாபரயுக முடிவில், உத்தவர் வேண்டுதலுக்கு இணங்கி, தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்ததால், ஸ்ரீமத் பாகவதம், சாக்ஷாத் ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வரூபமாகவே ப்ரகாசிக்கிறது.

இதனால் ''ஸ்ரீமத் பாகவதம், ஸ்வயம் ஹரி ரேவ'' என்றும் கொண்டாடப்படுகிறது. பாகவதத்தினைக் கேட்பதால் ஸகல யாகங்கள் செய்த பலனும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும் நம்மை வந்தடையும். பாகவத பாராயணத்தாலும், ஶ்ரவணத்தினாலும், நம் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலியன நிவர்த்தியாகின்றன. ப்ராஹ்மணருடைய பொருட்களை அபஹரிப்பதாலாகிய மஹா பாபங்களைச் செய்தவர்களும், ஸ்ரீமத் பாகவத ஶ்ரவணத்தினால் சுத்தியாகின்றனர்.

வெகு நாட்களுக்கு முன்பு, துங்கபத்ரா நதிக்கரையில், ஒரு பட்டினம் இருந்தது. அதில், அந்தந்த வர்ணத்தவர்கள் தங்களுடைய ஸ்வதர்மத்தை தவறாமல் ஸத்யத்துடன் அனுஷ்டித்து வருபவர்களாக இருந்தனர். அந்த நகரத்தில், ஆத்மதேவர் என்னும் ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டர் இருந்தார். அவர், ஸகல வேதங்களையும் அத்யயனம் செய்து, வல்லவராகவும், மற்றொரு சூரியன் என்னும் வியக்கும்படியான தேஜஸ் உள்ளவராகவும், தன்னுடைய ச்ரௌத, ஸ்மார்த்த என்னும் யாக யக்ஞாதி அனுஷ்டானங்களை குறைவின்றி நடத்தி வருபவராகவும் இருந்தார்.

ஆத்மதேவருக்கு துந்துலி என்ற ப்ரிய பத்தினி ஒருத்தி இருந்தாள். அவள் மிகவும் அழகுள்ளவளாகவும், மேலான குலத்தில் பிறந்தவளாகவும், வீட்டு வேலைகளில் மிகவும் சாமர்த்யம் உள்ளவளாகவும் இருந்தாள். ஆனால், அதே சமயம் வெகுவாக பேசுகிறவளாகவும், வீண் சண்டையில் மிகவும் ப்ரியம் உள்ளவ்ளாகவும், தான் சொன்னதே சரி என்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவம் உள்ளவளாகவும், க்ரூர எண்ணம் கொண்டவளாகவும் இருந்தாள்.

அர்த்தம், காமம் என்ற விஷய ஸுகங்களுக்கு இல்லாமல், சந்தான ப்ராப்திக்காக, ஆத்மதேவர் தன் மனைவியுடன் ப்ரியமுடன் குடும்பம் நடத்தி வந்தார்.

தர்ம வழியினில் ஈட்டிய செல்வங்களாகிய பசு, பூமி, தங்கம் இவற்றால், இருவரும் பல வகையான தானங்களை ஆதரவற்றவர் களுக்கு கொடுத்து வந்தனர். இங்ஙனம், தங்கள் செல்வத்தில் பாதியையும் செலவழித்தார்கள். அப்படியும் அவர்களுக்கு ஒரு புத்திரனோ, ஒரு புத்திரியோ பிறக்கவில்லை.

அதனால் மிகவும் கவலையடைந்த ஆத்மதேவர், வீட்டைத் துறந்து காட்டிற்குக் கிளம்பிச் சென்றார். அக்காட்டில், மத்யான்ஹிக காலத்தில், ஒரு குளத்தில் ஸ்நானம் செய்து, தாஹத்தை தீர்த்துக் கொள்ள தண்ணீர் பருகி, புத்திரன் இல்லாத குறையை நினைத்து வருத்தமாக இருக்கும் போது, அங்கு ஒரு ஸந்யாசி வருவதைக் கண்டார். ஆத்மதேவர் அந்த ஸந்யாசியிடம் அருகிற் சென்று, பக்தியுடன் நமஸ்கரித்து, பெருமூச்சு விட்டு துக்கத்துடன் நின்றார்.

ஸந்யாசி, ஆத்மதேவரைப் பார்த்து, ''ஓ ப்ராஹ்மணரே, உம்மைப் பார்த்தால் ஆழ்ந்த சிந்தனையில் கருத்தூன்றிருக்கிறாய் என்று தெரிகிறது. நீர் துக்க மயமாக காணப்படுகிறீர். அதற்கு காரணம் என்ன?'' என்று கேட்டார். அதனைக் கேட்ட ப்ராஹ்மணர், ஸந்யாசியை நோக்கி, 'என் துக்கம் பற்றி என்ன சொல்வேன். என் பித்ருக்கள் நான் கொடுக்கும் தீர்த்தத்தை வருத்தத்துடன் பெற்றுக் கொள்கின்றனர். தேவர்களும் ப்ராஹ்மணர்களும் நான் கொடுப்பதை ப்ரியத்துடன் வாங்கிக் கொள்வதில்லை. பிள்ளை இல்லாத குறையினால் நான் வெறுமையுடன் இருக்கிறேன். என் வீடும் வெறிச்சோடியே காணப்படுகிறது. என் வீட்டில் இருக்கும் பசுவும் மலடாக இருக்கிறது. என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிப்பது இல்லை. நான் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் உடனே காய்ந்து விடுகின்றன. இப்படி குழந்தை பாக்கியம் இல்லாமல் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன பிரயோஜனம்'' என்று சொல்லி கதறினார்.

அதனைக் கேட்ட ஸந்யாசியானவர், மிகவும் கருணையுடைய வராய் ஆத்மதேவரின் நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து, ''ஓ ப்ராஹ்மணா! அக்ஞானத்தை விட்டு விவேகத்தினைக் கைக் கொண்டு, குடும்ப ஆசையை ஒழித்து, ஸந்யாஸம் எடுத்துக் கொள்வாய். உன்னுடைய ப்ராரப்தத்தின் படி, உனக்கு ஏழு ஜன்மங்களாக பிள்ளை இல்லை. இனி ஏழு ஜன்மங்களும் பிள்ளை பிறக்காது. ஸகரர் என்னும் ராஜன், இந்த புத்திர சோகத்தை அடைந்தார். அதனால், குடும்ப ஆசையை மறந்துவிடு'' என்று சொன்னார்.

ஸந்யாசி சொன்னதைக் கேட்டும் ப்ராஹ்மணர் அதற்கு சம்மதிக்காமல், புத்திர சந்தானத்தில் ஆசைப்பட்டு, ஸந்யாசியைப் பார்த்து, 'ஸ்வாமி, விவேகத்தினால் எனக்கு என்ன பயன். எனக்கு புத்திர பாக்கியத்தை எப்படியும் அனுக்ரஹிப்பீர்கள். இல்லையென்றால் அந்த துக்கத்தினால் உமக்கு எதிராகவே உயிர் துறப்பேன்' என்று வேண்டிக் கொண்டார்.

ஸந்யாசியும், ப்ராஹ்மணரின் பிடிவாதத்தைப் பார்த்து, ஸந்யாசத்தைப் பற்றி உனக்குத் தெரியவில்லை. தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும். அப்படி மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும் படி நேரிடும். உனக்கு புத்திர ஸுகம் கிடைக்காது. ஆயினும், உமக்கு ஒரு பழத்தை கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்தினியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்வாயாக. இன்று முதல் ஒரு வருடம் வரையில் ஒரு வேளை போஜனம் செய்து கொண்டு ஸத்யம், சௌசம், தயை இவைகளில் தவறாமல் நியமத்துடன் அவள் இருக்க வேண்டும். உத்தமமான புத்திரன் பிறப்பான்'' என்று அனுக்ரஹித்து, ஒரு பழத்தை கொடுத்து அங்கிருந்து கிளம்பிச் சென்றார். ப்ராஹ்மணர் அதனைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து, தமது பத்தினியிடம் பழத்தை கொடுத்து ஸந்யாசி சொன்னதையெல்லாம் சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார்.

துந்துலியோ, தன்னுடைய தோழிகளிடம் இவ்விஷயங்களைச் சொல்லி வருத்தப்பட்டாள். ''இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாகிவிடும். வயிறு பெருத்து விடும். நான் குறைவாகவே சாப்பிட வேண்டியிருக்கும். தேஹத்தில் வலிமை குறையும். அப்பொழுது வீட்டு வேலைகளை எப்படி செய்யமுடியும்? ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரை இழக்கும்படி நேரிடுமே! ப்ரசவ காலத்தில் உண்டாகும் உபத்திரவத்தை நான் எப்படி ஸகிப்பேன்? இந்த ஒரு வருடம் நியமமாக இருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித்திருக்கும் போது, வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும் பர்த்தாவின் ஸஹோதரியானவள் அபஹரித்து விடுவாள். ப்ரஸவித்தப் பிறகும் குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கடினம். ஆசாரத்திற்கு குறைவு வந்துவிடும். ஆகையால், மலடியாகவோ, விதவையாகவோ இருப்பதே மேலானது என்று நினைக்கிறேன்'' என்று சொன்னாள்.

இவ்வாறெல்லாம் குதர்க்கமாக நினைத்த அவள், பிறகு அந்தப் பழத்தை புஜிக்கவில்லை. கிராமாந்தரம் சென்று திரும்பிய ப்ராஹ்மணர்,

பத்தினியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா? என்று கேட்க, அவளும் புஜித்தேன் என்று பதில் சொன்னாள். இந்த சமயத்தில், துந்துலியின் சகோதரி அவள் வீட்டிற்கு வந்தாள். அப்பொழுது துந்துலி, அவளிடம் இந்த விஷயங்களை முழுவதையும் சொல்லி வருத்தப் பட்டாள்.

அதைக் கேட்ட அவள் சகோதரி, துந்துலியை நோக்கி "நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக் கிறேன். நான் ப்ரஸவிக்கின்ற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாக இருப்பது போல பிறருக்குச் சொல்லிக் கொண்டுவா. உன் வீட்டில் இருக்கும் பணத்தை, நீ என் புருஷனுக்கு கொடுத்து விடுவா யானால், எனக்கு பிறக்கும் குழந்தையை உனக்கு கொடுத்து விடுகிறேன். என் குழந்தை இறந்து விட்டது என்று சொல்கிறேன். உன் வீட்டில் வந்திருந்து குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தை வேண்டு மானால் பசுவிற்கு கொடுத்து பரிக்ஷை செய்யலாம்" என்று சொன்னாள்.

துந்துலியும் தன் சகோதரி சொன்னதை கேட்டு, அவ்வண்ணமே செய்தாள். அவள் சகோதரி ப்ரஸவித்தவுடன் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாக ப்ரஸவித்தேன்', என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். ஆத்மதேவரும் மிகுந்த சந்தோஷமடைந்து தான தர்மங்கள் பலவற்றைச் செய்து குழந்தைக்கு ஜாதகர்மம் முதலியவை களைச் செய்தார். அப்பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, "ஸ்தனத்தில் பாலில்லை. அன்யர்களுடைய பால் கொண்டு என் குழந்தையை வளர்க்க முடியாது. என்னுடைய தங்கையின் குழந்தை இறந்துவிட்டது. அதனால் அவளுக்குப் பால் மிகுதியாக இருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்" என்று சொன்னாள். அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார்.

அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நிர்மலனாயும் நல்ல தேஜஸ்வியும், மிக அழகுள்ளவனு மான ஒரு புத்திரன் பிறந்தான்.

அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காதுபோல் இருந்தது. அதனால் அவனுக்கு 'கோகர்ணன்' என்று பெயரிடப்பட்டது. எல்லோரும் கோகர்ணனைப் பார்க்க ஆவலுடன் வந்தனர். அந்தக் குழந்தைக்கும் புண்யாகவசனாதிகளை ப்ராஹ்மணரே செய்து வைத்தார். கோகர்ணனும், துந்துகாரியும் சமமாகவே வளர்ந்தார்கள்.

கோகர்ணன் வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாகவும் இருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாயும், குரோதகனாகவும், திருடனாகவும், அசுத்தனாகவும் மஹா பாபியாகியுமிருந்தான். பக்கத்து வீட்டாரின் குழந்தைகளை கிணற்றில் போடுவான். கையில் எப்பொழுதும் ஆயுதம் வைத்துக் கொண்டு தீனர்களை ஹிம்சை பண்ணுவான். இப்படிச் சிலகாலம் சென்ற பிறகு, துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய், தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்ம தேவர் ''பிள்ளை இல்லாமல் இருப்பதே மேலானது. இந்த துஷ்டப்பிள்ளையை அடைந்து நான் மிகவும் கஷ்டப்படு கிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள். என் பிராணனை விடப் போவதைத் தவிர வேறு வழியில்லையே என்று கதறி அழுதார். அப்பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் சொன்னான்.

'சம்சாரம் சாரமற்றது. மோஹத்தில் ஆழ்த்தக்கூடியது. யாருடைய குழந்தை, யாருடைய பணம், யாருக்கு இந்த விஷயத்தில் பாசம் இருக்கிறதோ அவனுக்குக் கஷ்டம் வருகிறது. இந்திரனுக்கும் சுகம் என்பதில்லை. யார் விரத்தராகி உள்ளாரோ அவருக்கே சுகம். அதனால் அஞ்ஞானத்தை விடு. வனத்திற்குப் போ' என்று செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டு பண்ணினான். பின்பு, ஆத்மதேவர், கோகர்ணன் உபதேசத்தால், வீட்டை விட்டுக் காட்டுக்குச் செல்லக் கிளம்பிப் போகும் போது, கோகர்ணனிடம் 'வனத்திற்குச் சென்று என்ன செய்ய வேண்டும் என்று தத்வார்த்தத்தைச் சொல்' என்று கேட்க, கோகர்ணனும் ப்ராஹ்மணருக்கு 'உடல், சுற்றம், ஜகம் எல்லாம் மித்யையாகக் கொள். பக்தியில் ரஸனாக இரு. லோக தர்மத்தை விட்டு பாகவத தர்மத்தைக் கைக் கொள். ஸாதுக்களுக்கு ஸேவை செய். பிறர் தோஷம் பார்க்காதே' என்று சொல்ல, அதைக் கேட்ட ப்ராஹ்மணர் வனம் சென்று, ஒவ்வொரு நாளும், பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீ க்ருஷ்ண சாயுஜ்யத்தை அடைந்தார்.

பிறகு அந்தத் துந்துகாரியானவன், தாயாரை நோக்கி, வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னைக் கொல்வேன் என்று மிரட்டினான்.

அதனால் மனது உடைந்த துந்துலி, ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரணமடைந்தாள். யோகியான கோகர்ணன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்திரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியோ வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களை போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். ஒரு சமயம், அந்த தாஸிகள் நகை வேண்டும் என்று அவனை நிர்ப்பந்திக்க, அவன் தேசாந்திரம் சென்று நல்ல வஸ்த்ரங்கள், நகைகள் முதலியனவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான்.

இப்படி, மிக அதிகமான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக் கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்து அந்த தாஸிகள் ஒருநாள் ராத்திரி, ''இவன் இவ்வளவு வஸ்துக்களையும் திருடிக் கொண்டு வந்திருப்பதனால், அரசனுடைய சேவர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே. அதனால் இவனைக் கொன்று இந்த பணத்தை எடுத்துக் கொண்டு போகலாம்'' என்று யோசித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். பிறகு மேலும், அவர்கள் அக்கினியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு, அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள்.

மறுநாள் துந்துகாரி எங்கே? என்று கேட்பவர்களுக்குப் பணம் சம்பாதிக்க தேசாந்திரம் போயிருக்கிறான் என்றும், ஒரு வருஷத்தில் திரும்பி விடுவான் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்து போன துந்துகாரி, அவனுடைய பாப கர்மாவினால் ப்ரேத ஜன்மத்தை யடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும், பசி தாகத்தால் துன்பத்தை அடைந்தும், ஒரு லோகமும் அடையாமல் தன் துக்க நிலையை எண்ணி மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில், கோகர்ணன் துந்துகாரி இறந்து போனான் என்பதைக் கேள்விப்பட்டு, அவனை உத்தேஸித்து கயாக்ஷேத்ரத்தில் விதிப்படி ச்ரார்த்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேஸித்துப் பிண்டதானம் முதலியவைகளைச் செய்தான்.

(தொடரும்)

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 19

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

*ஊர் சுற்றுளம் விடாதுனைக் கண்டடங்கிட*
*உன்னழகைக் காட்டு அருணாசலா* 8

ஊர் சுற்றும் உளம் - 'உலகில் உள்ள பலர், தங்களுடைய மனது எதைப் பற்றி நினைக்கிறது என்று கவலைப்படுவதில்லை. தங்களுக்கு தியானம் பண்ண வருகிறதா, மனதில் சஞ்சல புத்தி இருக்கிறதா என்றெல்லாம் விசாரிப்பதில்லை. சிறிது நேரம் தியானம் பண்ண உட்காரும் போது தான், மனது எத்தனை தூரம் ஓடுகிறது என்பது தெரிகிறது. பார்வையை நம் பக்கமாக திருப்பும் போது தான் இது புரிகிறது. மற்ற சமயங்களில் இது பற்றிய எண்ணம் இல்லை.

நமது எண்ணங்களை தவிர்த்து, மனம் என்று தனியாக ஒன்று இல்லை. நமது சரீரம், இந்திரியங்கள், புத்தி, மனது இதெல்லாம் ஜடம். ஆத்மா மட்டும் தான் சைதன்யம். சைதன்யத்தினால் தான் இவையெல்லாம் பரிமளிக்கிறது. மனம் ஜடவஸ்துவை பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆத்மஸ்தானம் தான் மனதின் உற்பத்தி ஸ்தானம். மனம், பிராணன் இவை இரண்டின் உற்பத்தி ஸ்தானமும் ஒன்றே. ராஜயோகிகள், பிராணனை அடக்கி மனதை நிக்ரஹபடுத்துகிறார்கள். நாம் ஒரு விஷயத்தில் தீவிர கவனமாய் இருக்கும் பொழுது, நம் பிராணன் அடங்கி விடுவதைக் காணலாம். ஆக, பிராணன் அடங்கி விட்டால் மனமும் அடங்கி விடும்.

எப்படி சிலந்தியானது நூலை தன்னிடமிருந்து வெளியே விட்டு மீண்டும் தன்னிடமே இழுத்துக் கொள்கிறதோ, அதுபோல், மனது கிளம்பி ஊர், உலகம் எல்லாவற்றையும் சுற்றி பார்த்து விட்டு, தன் யதா ஸ்தானத்திற்கு வருகிறது. ஒரு சிந்தனையைத் தொற்றிக் கொண்டு மற்றொரு சிந்தனையாக தொடர்ந்து கொண்டே போகிறது. ஆரம்பத்தில் தியானம் பண்ணும் பொழுது, சிறிது நேரம் தெய்வச் சிந்தனை வருகிறது. பிறகு, சிறிது நேரம் லௌகீக சிந்தனை வருகிறது. அதையே தான், இங்கு

நாயகி அருணாசலேஸ்வரனிடம், ''எனக்கு உன்னையே தியானம் பண்ண ஆசை இருக்கிறது. ஆனால், என்னுடைய மனது அதை விடாமல் தடுக்கிறது. ஏனென்றால், அது உன் ஸ்வருபத்தை இன்னும் பார்க்க வில்லை. உன் ஸ்வரூபத்தை பார்த்து விட்டால், என் மனது உன்னை விடாது. சத்தியமான உன்னிடத்தில் அதற்கு ருசி இல்லாததால் தான் மாயா மயமான உலகில் மனம் மயங்கி கொண்டிருக்கிறது. அதனால், எனக்கு உன் ஸ்வருபத்தைக் காட்டு'' என்று சொல்கிறாள்.

ஸ்ரீ க்ருஷ்ணன், தனது வாயினுள்ளே ஈரேழு உலகங்களையும், தனது தாய் யசோதைக்கு காண்பித்ததாக ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது. பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனின் வாயினுள்ளே ஈரேழு உலகங்கள் அடங்கி விட்டது என்றால், பின்பு இந்த ஜகத் எப்படி சத்யமாக இருக்கும். ஆனாலும், நம் மனதானது ஸ்வபாவமாக இந்த மித்யையாக இருக்கக்கூடிய ப்ரபஞ்சத்தை நோக்கி ஓடுகிறது. கோடானு கோடி ஜன்மாக்களாக இந்த லோகத்தை நோக்கியே மனது போனதுதான் அதற்கு காரணம். இந்த தேசத்தில் எத்தனையோ பெரிய அவதார புருஷர்கள் வந்திருக்கின்றனர். அத்தனை பேர் அவதரித்திருந்தாலும், அவர்களை உலகம் பயன்படுத்திக் கொண்டதா என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கிறது. ஒருக்கால், அப்பேர்பட்ட மஹாத்மாக்களிடம் நிறைய பேர் வருவதாக பார்த்தால் கூட, இந்த ஜகத்தில் இருக்கும் மொத்த ஜனத்தொகையைப் பார்க்கும் போது அது மிக குறைவாகவே உள்ளது. ஆனால், அந்த அவதார புருஷர்கள், ஒரு பத்து பேரை மாற்றி இருந்தாலும், அது பெரிய விஷயம் தான். காரணம், சதா உலகத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கும் மனதின் சுபாவமான போக்கை மாற்றி, பகவத் விஷயத்தில் கொண்டுவருவது என்பது மிகவும் கஷ்டம்.

ஒரு நதியானது, கிழக்கிலிருந்து மேற்காக ப்ரவாகம் எடுத்துச் செல்லும் பொழுது, அதில் ஒரு தேங்காயை போட்டால், அது நதியின் ப்ரவாகத்துடன் செல்வதுதான் இயல்பு. அந்த நதியில், படகு போகும் போது, துடுப்பு போடாமலேயே, சுலபமாகவே படகு ப்ரவாகத்துடன் செல்லும், ஆனால் ப்ரவாகத்திற்கு எதிராக போகவேண்டும் என்றால், துடுப்பை பலமாக அதியத்தனத்துடன் போட வேண்டியிருக்கிறது. அதுபோல், சாமான்ய மக்களின் மனது, பிறர் தூண்டுதலின்றி லோகத்தை நோக்கிச் செல்லும். அந்த மக்களின் மனதை பகவத் சரணத்திற்கு கொண்டு வருவது தான் பெரிய விஷயம்.

''ஊர் சுற்றும் உளம்'' - மேலும் நாயகி, ''என்னோட மனது உன்னிடம் ஈடுபடாததற்கு காரணம் உன் தப்புத்தான், நீ உன்னை எனக்கு சரியாக புரிய வைத்திருந்தால், இந்த மனது வெளிவிஷயங்களில் சென்றிருக்காது'' என்று சொல்கிறாள். பகவானாக தன்னைக் காண்பித்து கொடுத்தால் தான் பகவானை புரிந்து கொள்ள முடியும். நம் புத்தியினால் பகவானை ஒருகாலும் புரிந்து கொள்ள முடியாது. புத்தி ப்ரகாசிப்பதற்கே ஆத்மாதான் காரணமானபடியால் புத்தியை கொண்டு ஆத்மாவை உணரமுடியாது.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கதை சொல்லும் பொழுது, ''கோடானு கோடி ஜனங்களை ஒருவன் தன் கையில் உள்ள விளக்கினால் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் கையில் விளக்கு உள்ளதால், அவனால் எல்லோரையும் பார்க்க முடிகிறது. ஆனால், அவனை யாரும் பார்க்க முடியாது. அவன் அந்த விளக்கின் வெளிச்சத்தை, தன்மீது திருப்பிக் கொண்டால் தான் நாம் அவனைப் பார்க்க முடியும்.'' என்று சொல்கிறார்.

ஆத்மா யாரை வரிகிறதோ, அவர்களுக்கே ஆத்ம தரிசனம் ஏற்படுகிறது என்று உபநிஷத் கூறிகிறது. வேதாந்தம் மட்டுமில்லாமல் பக்தியிலும் இப்படியே சொல்லப்பட்டுள்ளது. ஊர் 'சுற்றுளம்' என்று நாயகி சொல்லும்போது ''சுற்றத்தாரும் ஊராரும், நான் உன்னிடம் பக்தி பண்ணுவதற்கு விடமாட்டார்கள். அவர்கள் அக்ஞானத்திலிருப்பதால் அவர்களுக்கு, நீ யார்? என்று தெரியவில்லை. அந்த அக்ஞானத்தை அழித்து அவர்களுக்கும் உன் ஸ்வரூபத்தை காட்டிவிடு. அப்படி அவர்கள், உன் ஸ்வரூபத்தை தெரிந்து கொண்டால் நான் உன்னிடம் ஐக்கியமாக விரும்புவதை தடுப்பார்களா? என் விஷயத்தில் அனுகூலமாக அல்லவா இருப்பார்கள்'' என்று அருணாசலேஸ்வரனிடம் சொல்கிறாள்.

(தொடரும்)

தொகுப்பு: **முரளீதர தாஸன்.**

---

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'' ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேசட்டுகள் - மூன்றாம் பாகம் (7 காஸெட்டுகள்) வெளிவந்துள்ளன.

# செய்திகள்

## ஜனவரி 29-ம் தேதி

ஸ்ரீ குருஜி *பெங்களூர்* சென்று *வேத சதஸில்* கலந்து கொண்டார்கள்.

---

## பிப்ரவரி 1-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை

சென்னை *ஆதம்பாக்கத்தில்* உள்ள சங்கர கேந்திரம் கைங்கர்ய சபா சார்பில் நடத்தப்பட்ட *சண்டி ஹோமத்தில்,* ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு ஸ்ரீ மஹா பெரியவாளைப் பற்றி பேசினார்கள். அதன் சாராம்ஸம்,

''வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு லக்ஷியம் இருக்க வேண்டும். லக்ஷியம் இல்லாமல் வாழும் வாழ்க்கை ம்ருகங்களுக்கு சமமானது. அவைகள் தான் லக்ஷியம் இல்லாமல் வாழும். ஆத்ம ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதே நம் வாழ்க்கையின் லக்ஷியமாகும். இந்த அத்யாத்மிக சிந்தனையை மக்களிடம் ஏற்படுவதற்கு சமூக வாழ்க்கை அமைய வேண்டும். அதனால் தான் மஹாராஜாக்கள், ஒரு ஞானியை குருவாக வரித்து ராஜ்யம் ஆண்டார்கள். சமர்த்த ராமதாஸர், மகாத்மா காந்தி போன்றோர் ராஜ்ய பரிபாலனத்திற்கு பகவத் பக்தியை வடிகோலாக்கினார்கள்.

தெய்வ பக்தியும், தேச பக்தியும் வேறு வேறல்ல. வெளிநாட்டவர்களை நம்நாட்டிலிருந்து வெளியேற்றியது, நம்முடைய கலாச்சாரம் மாறிவிடப் போகிறதே என்ற கவலையினால் தான். ஆனாலும், இப்போது அந்த வெளிநாட்டு கலாச்சார பாதிப்பு இருக்கத்தான் செய்கிறது. ஸ்ரீ மஹா பெரியவாள் வாழும் மார்க்கத்தை நமக்கு காட்டியுள்ளார்கள். எத்தனை நாள் அவர் மார்க்கம் இருக்கிறதோ, அத்தனை நாள் பெரியவாள் நம்முடன் ஜீவித்துக் கொண்டிருக்கிறார் என்பதாகும்.''

---

## பிப்ரவரி 7-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை

சென்னை *ப்ரேமிக பவனில்* 7-2-97 காலை 6 மணி முதல் 14-2-97 காலை 6 மணி வரை *த்வாதசாக்ஷரி சப்தாஹ ஜப யக்ஞம்* நடைபெற்றது. பகல் வேளையில் ஸ்த்ரீகளும், இரவு வேளையில் புருஷர்களும் இந்த அகண்ட ஜப யக்ஞத்தில் கலந்து கொண்டனர்.

### பிப்ரவரி 22-ந் தேதி - மாசி மகம்

*திருவிடந்தை* க்ஷேத்ரத்தில் தீர்த்தவாரி உத்ஸவம் ப்ரதி வருடம் போல் இவ்வருடமும் சிறப்பான முறையில் நிகழ்த்தப்பட்டது.

---

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### மார்ச் 1-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை

*பெங்களூர் ஸ்ரீ சங்கர மடத்தில்,* ஸ்ரீ குருஜி *"பக்த விஜயம்"* பற்றி உபன்யாசம் செய்கிறார்கள்.

---

### மார்ச் 7- ந் தேதி - மஹா சிவராத்திரி

*வடவாம்பலம்* ஸ்ரீ ஆத்ம போதேந்த்ர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில், ஸ்ரீ குருஜி, ஐந்து கால அபிஷேகம், பூஜை நிகழ்த்துகிறார்கள்.

---

### மார்ச் 24-ந் தேதி - பங்குனி உத்திரம்

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதப் பெருமாளுக்கு திருக்கல்யாண உத்ஸவம் - ஸ்ரீ குருஜி நிகழ்த்துகிறார்கள்.

---

### மார்ச் 29-ந் தேதி - அனுஷ நக்ஷத்திரம்

மாதாந்திர *'அத்வைத ஸித்தி'* - வாக்யார்த்த ஸதஸ், சென்னை *ப்ரேமிக பவனில்* நடைபெறும்.

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95 Regd. No. TN/MS/(S)/714

Single Copy Rs. 5/- Annual Subs. Rs. 60/-

| வேணு : 2 | மார்ச் 1997 | கானம் : 8 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar